# பட்டயம்

மலர் - 08 ஜனவரி - 2012 இதழ் - 3

Date of Issue : 01-01-2012

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 8

Issue : 3 Price Per Copy : Rs.5.00

## பின்மாரி மலர்



தமது ஜனத்திற்குக் கொண்டாட்டமாக
ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா! (சங் 148/14)

WE WISH YOU A HAPPY CHRISTMAS & NEW YEAR

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர் கடிதம்

CqYÚP YôdÏjRjRm

'ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்' - மல்கியா 4/2.

இந்த கொடிய நாட்களில் நீதியின் சூரியனாகிய இயேசு நம்மேல் உதிப்பேன் என வாக்குக் கொடுக்கிறார். யாருக்கு அவர் நீதியின் சூரியனாக உதிப்பார்? அவர் நாமத்துக்குப் பயந்தவர்களுக்காகத் தான். கர்த்தருக்குப் பயப்படுதல் என்றால் என்ன? பாவம் செய்ய பயப்படுவது தான் கர்த்தருக்குப் பயப்படுதல். இன்றைக்கு அநேகர் மனுஷருக்கு பயப்படுகிறார்கள். ஆனால் தேவனுக்குப் பயப்படுகிறதில்லை. மனுஷனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருஷிக்கும்.

'கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் அவர் ஆசீர்வதிக்கிறார்' - சங் 115/13.

நம் ஆராதனைகளில் பயமும் வேண்டும்; பக்தியும் வேண்டும். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள் ; நடுக்கத்துடனே களிகூருங்கள் என சங் 2/11ல் வாசிக்கிறோம். கர்த்தருக்கடுத்த காரியங்களில் அவருக்குப் பயந்து உண்மையாக செயல்பட வேண்டும். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான் (எபி 3/1); கர்த்தருக்குப் பயப்படுகிறவன் தான் ஊழியத்தை உண்மையாய் செய்வான். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். கர்த்தருக்குக் கொடுப்பதில் உண்மையாக இருக்க வேண்டும். தசம பாகங்களிலும், காணிக்கைகளிலும் அவரை வஞ்சிக்கக் கூடாது. அவர் நியாயப்பிரமாணங்களை, கட்டளைகளை அவருக்குப் பயந்து கைக்கொள்ளுங்கள். அப்போது நீதியின் சூரியன் உங்கள் மேல் உதிப்பார்.

ஆண்டவர் நீதியின் சூரியனாய் உதிக்கும்போது கீழ்க்கண்ட ஆசீர்கள் கிடைக்கும்.

1 ஆரோக்கியம் – அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். அவர் உனக்கு ஆரோக்கியம் வரப் பண்ணி, உன் காயங்களை ஆற்றுவார் (எரேமியா 30/17). உனக்கு சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப் பண்ணி, உன்னை குணமாக்குவார் (எரே 33/6). அவர் செட்டைகளின் கீழ் உனக்கு அடைக்கலம் கிடைக்கும். 'அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதித்து, வியாதியை உன்னிருந்து விலக்குவார்' (யாத் 23/25).

2. ஆவிக்குரிய செழிப்பு - 'நீங்கள் வெளியே புறப்பட்டு போய்,

கொழுத்த கன்றுகளைப் போல வளருவீர்கள்' (மல்கியா 4/2). ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி உண்டாகும். ஊழிய எல்லைகள் விஸ்தாரமாகும். ஜெப ஜீவியத்தில் வளர்ச்சி காணப்படும். பின்மாரி எழுப்புதல் உண்டாகும்.

3. நீதி, நியாயம் கிடைக்கும் - எல்லா அநியாயங்களும் அடங்கிப் போகும். அகங்காரிகளும், அக்கிரமக்காரர்களும் அடங்கிப் போவார்கள். அவர்கள் துர்க்கிரியைகள் செயலற்றுப் போகும் (மல் 4/1)

4. துன்மார்க்கர்கள் வெட்கப்பட்டு போவார்கள் - அவர்கள் உங்களை மேற்கொள்வதில்லை. 'துன்மார்க்கரை மிதிப்பீர்கள், நான் இதை செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள்' (மல் 4/3)

5. கர்த்தர் நம்மைக் கடாட்சிப்பார் - அவர் நமக்கு இரங்குவார். ஒரு மனுஷன் தனக்கு ஊழியம் செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறது போல நான் அவர்களைக் கடாட்சிப்பேன் என மல்கியா 3/17ல் வாக்குக் கொடுக்கிறார்.

6. வித்தியாசம் காட்டுவார் - நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை வெளிபடையாகக் காட்டுவார்.

7. எழும்பிப் பிரகாசிக்கச் செய்வார் - நீதியின் சூரியன் நம் மேல் உதிக்கும் போது நாம் எழும்பிப் பிரகாசிப்போம். கர்த்தருடைய மகிமை நம் மேல் உதிக்கும். அநேகரை கர்த்தரண்டைக்கு வழி நடத்த உதவி செய்வார். நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்கும் பிரகாசிக்கச் செய்வார். (ஏசாயா. 60/1, தானி 12/5)

கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளின்படி நம்மை இந்த ஆண்டிலே ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார்.

- ஆமென்

úLs®-T§p

**350. ஆவிக்குரிய ஆசிர்களை யாருக்கு கிடைக்கும்?**

7 வழியாக சென்றால் அவர் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியாது. விசுவாசிக்கிற பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் 7 விதங்களில் வரலாம், அவர் பிரமாணங்களின்படி நடந்தால், நிச்சயமாக அவர் வார்த்தைகளின்படி நமக்குச் செய்வார். அவர் பிரமாணத்திற்குக்

கீழ்படியும் போது இரக்கம் நமக்கு நிச்சயம் கிடைக்கும். ஜெபித்தால் மட்டும் போதாது. கீழ்படிதலும் வேண்டும். கீழ்படியாமல் ஜெபித்தால் எந்த பிரயோஜனமும் இல்லை.

உலகப்பிரகாரமான ஆசீர்களை பெறலாம். ஆனால் ஆவியில் எளிமை இல்லாவிட்டால் பரலோக ராஜ்யத்திற்கடுத்த கிருபைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. உலக ஆசீர்வாதமும் வேண்டும். ஆவிக்குரிய ஆசீர்வாதமும் வேண்டும். ஆவியில் எளிமை இல்லாதவனுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்காது; கர்த்தருக்கடுத்த காரியமாய் எதையும் செய்ய முடியாது. கர்த்தருக்கடுத்த காரியங்கள் செய்ய வேண்டுமானால் அவர் இரக்கம் நமக்கு வேண்டும். சிலருக்கு ஊழியம் செய்ய விருப்பம் இருக்கும். ஆனால் அவர்களால் செய்ய முடியாது. ஆவிக்குரிய ஆசீர் இல்லாவிட்டால் அதைச் செய்ய முடியாது. கர்த்தருக்கடுத்த ஊழியம் நம் திறமையால் செய்ய முடியாது. ஆவியில் பெருமை இருந்தால் ஆண்டவர் உன்னை பயன்படுத்த முடியாது. ஒரு கழுதையைப் போல நாம் ஆண்டவர் பின்னால் போக வேண்டும். அவருக்கு முன்பாக நம்மைத் தரைமட்டும் தாழ்த்த வேண்டும். எவ்வளவாய் நம்மை அவருக்கு முன்பாக தாழ்த்துகிறோமோ அவ்வளவாய் நம்மை உயர்த்துவார்.

**351. மகா பரிசுத்த ஸ்தலம் புதிய ஏற்பாட்டில் எதைக் குறிக்கிறது?**

மகா பரிசுத்த ஸ்தலத்திலே கிருபாசனமும், உடன்படிக்கை பெட்டியும் இருந்தது. வருஷத்திற்கு 1 தடவை மாத்திரமே பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான். இப்போது மகா பரிசுத்த ஸ்தலம் பரலோகத்திலுள்ள ஆலயத்தைக் குறிக்கும். அங்கே கிருபாசனத்திலே ஆண்டவர் அமர்ந்திருக்கிறார். கடவுளின் வலது பாரிசத்தில் சக்கரவர்த்தியாய், ராஜாதி ராஜாவாய் வீற்றிருக்கிறார். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இயேசு தம் சொந்த இரத்தத்தால் பிரவேசித்தார். இயேசு சிலுவையில் மரித்தபோது தேவாலயத்து திரைச்சீலை இரண்டாக கிழிந்தது. பரிசுத்த ஸ்தலம் திறக்கப்பட்டதற்கு இது அடையாளமாக இருக்கிறது. ஆண்டவரின் இரத்தம் பரலோகத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தை திறக்கிறது. பூமியிலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியன் வருஷத்தில் ஒரு தடவை மாத்திரமே பிரவேசிக்க முடியும். ஆனால் இயேசு இரத்தம் சிந்தியபடியால் பரலோகிலுள்ள பரிசுத்த ஸ்தலம் நமக்காக எப்பொழுதும் திறந்திருக்கிறது. இப்போது பூமியிலுள்ள ஆலயங்கள் தான் பரிசுத்த ஸ்தலங்கள். இந்த பரிசுத்த ஸ்தலத்திற்குள்

வரும் போது நாம் பரிசுத்த அலங்காரத்தோடு வர வேண்டும். பரிசுத்த ஸ்தலத்தை சுத்தமாக எப்பொழுதும் வைத்துக் கொள்ள வேண்டும். அதை அசுத்தப்படுத்தவோ, கெடுக்கவோ கூடாது. இது ஆண்டவருக்கு விரோதமானது. ஆராதனை ஸ்தலம் என்பது ஜெப ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், சகல ஜனங்களுக்கும் ஜெப வீடு, இதிலே ஆண்டவர் தங்குகிறார் என்ற பயம் நமக்குள் இருக்க வேண்டும். ஆலயத்திற்கு வருகிற வழியிலே பரிசுத்த நடையோடு வர வேண்டும். மூடர் ப□ செலுத்துவதைப் பார்க்கிலும், செவி கொடுக்கச் சேர்வதே நலம். தேவாலயம் வருகிறவர்கள் மூடர் ப□போல செலுத்தக் கூடாது. பயத்தோடும், பக்தியோடும் வர வேண்டும். நடையைக் காத்துக் கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட பரிசுத்த ஆராதனையில் பரிசுத்தம் காக்கப்பட வேண்டும். ஆலயத்தையும், ஆராதனையையும் அலட்சியம் பண்ணக்கூடாது. ஆராதனையில் பரிசத்தம் காணப்பட வேண்டும். ஒழுக்கம் இருக்க வேண்டும். பயமும், பக்தியும் இருக்க வேண்டும். சத்திய வசனம் வெளிப்பட வேண்டும். ஜீவனுள்ள சாட்சிகள் எழும்ப வேண்டும். ஆண்டவர் நாமம் மகிமைப்பட வேண்டும். அவருக்கு பிரியமான ஆராதனை செலுத்தினால் சாபங்கள், தரித்திரங்கள், கட்டுகள், பிரச்சனைகள் மாறிப் போகும். ஜீவனுள்ள தேவனுக்கு ஜீவனுள்ள ஆராதனையைச் செலுத்துங்கள்.

**352. கிருபையைப் பெற என்ன செய்ய வேண்டும்?**

அவர் பரிபூரணத்தினால் நாம் கிருபை மேல் கிருபை பெறுகிறோம். நாம் வாழும் உலகில் தீமை உண்டு, பாவம் உண்டு, பாவிகள் உண்டு, ஆபத்துகளும் உண்டு. பூமியிலே இவைகள் நம்மைச் சுற்றி இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் நாம் ஆண்டவரால் தப்பிக் கொள்ள வேண்டும். மனுஷனால் சில உதவிகள் நமக்குக் கிடைக்கலாம். ஆனால் மனுஷனால் தீமைகளுக்கு முழுமையாக நாம் தப்பிக் கொள்ள முடியாது. இந்த பயங்கரமான உலகத்திலே நாம் தப்பிக் கொள்ள நமக்கு தேவை தேவ கிருபை. கிருபை பெற காத்திருக்க வேண்டும். ஜீவனைப் பார்க்கிலும் கிருபை நல்லது. கிருபை பெற ஆலயத்திற்கு வர வேண்டும். அதிகாலையில் காத்திருக்க வேண்டும். அவர் கிருபையை இலவசமாய் கொடுக்கிறார். அவர் நிறைவின் தேவன். அந்த கிருபையை நாம் பெற்றால், தீமைக்குத் தப்பிக் கொள்வோம். பெதஸ்தா குளத்தில் எவன் முந்தி இறங்கினானோ, அவன் தான் சுகம் பெறுவான். தேவலாயத்திற்கு வர முந்திக் கொள்ளுங்கள். அவர் எந்த நேரத்தில் நம்மை

ஆசீர்வதிப்பார், எந்த நேரத்தில் அவர் கிருபை நம் மேல் இறங்கும் என்பது நமக்குத் தெரியாது. நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்பது அவர் வாக்குத்தத்தம்.

**353. கர்த்தரின் ஆசீர்களை நீ பெற்றிருக்கிறாயா? எது கர்த்தரின் ஆசீர்வாதம்?**

கர்த்தர் தரும் ஆசீர் வேதனையில்லாத ஐசுவரியமுள்ள திருப்தியுள்ள வாழ்வு, மனுஷர் இரக்கம் உள்ள வாழ்வு, தேவ ஆலோசனை பெறும் வாழ்வு, சமாதானமுள்ள வாழ்வு, சந்தோஷமுள்ள வாழ்வு, பூமிக்கு உப்பாய், வெளிச்சமாய் இருக்கும் வாழ்வு, ஆத்தும ஆதாயப் பணிக்கு பிரயோஜனமுள்ளள வாழ்வு, பரிசுத்தமுள்ள வாழ்வு, சாத்தான் மேலும் சத்ருக்கள் மேலும் வெற்றியுள்ள வாழ்வு, தேவ ராஜ்யத்தை கட்டி எழுப்பும் வாழ்வு, கர்த்தர் சித்தம் செய்து நிறைவேற்றும் வாழ்வு, எல்லா நீதியும் நிறைவேற்றும் வாழ்வு.

**354. ஆவிக்குரிய இஸ்ரவேலன் எப்படி இருப்பான்?**

இஸ்ரவேல் என்னும் பெயர் யாக்கோபு ஜெபிக்கிறவனாக மாறிய போது கிடைத்தது. யாக்கோபு ஜெபித்து ஜெயம் எடுத்தான். தன்னிடம் ஒன்றுமில்லாத சூழ்நிலையிலும் பொருத்தனை பண்ணினான். பொருத்தனையை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தான். இஸ்ரவேல் என்னும் நாமம் நாம் பெற வேண்டுமானால் நமக்கு பக்தி வேண்டும்; ஜெபிக்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும். இரவும் பகலும் ஆண்டவரைத் தேட வேண்டும். தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொள்பவர்கள் தான் இஸ்ரவேல் என்பவர்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுவான். ஆண்டவரைத் துதிப்பான்; ஸ்தோத்திரிப்பான்; நேசிப்பான். வாழ்விலும் அவரை மறுதக்க மாட்டான். தாழ்விலும் மறுதக்கமாட்டான்.

**355. தொடர்ந்து வரும் துன்பங்கள் மாற என்ன செய்ய வேண்டும்?**

தொடர்ந்து வரும் துன்பங்கள் மாற வேண்டுமானால் பாவ அறிக்கை பண்ணி, மன்னிப்பைப் பெற்று ஜெபிக்க வேண்டும். ஆண்வருக்கு முன்பாக நாம் குற்றவாளிகளாக இருந்து ஜெபித்தால், அந்த ஜெபம் கேட்கப் படாது. மன்னிப்பு பெற்ற பாவத்தை மீண்டுமாக செய்யக் கூடாது. பாவியான ஸ்தீரி தன் பாவங்களை மறைக்காமல் ஆண்டவர் பாதத்தில் அறிக்கை பண்ணி தன் கண்ணீரை ஊற்றினாள். அது போல நமக்குள் பாவ உணர்வு இருக்க வேண்டும். தலைமயிரால் அவர் பாதத்தைத் துடைத்தாள். இது அவள் தாழ்மையைக் குறிக்கும்.

அவருக்கு முன் நம்மைத் தாழ்த்துவதற்கு உபவாசம் ஒரு அடையாளமாகும். அழுது ஜெபிப்பதும் தாழ்மையின் மற்றொரு அடையாளமாகும். கண்களிருந்து மட்டும் அல்ல. இருதயத்திருந்தும் கண்ணீர் வர வேண்டும். பெருமை இருக்கிற இடத்தில் தாழ்மை இல்லை. கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தரைமட்டும் தாழ்த்த வேண்டும்.

பாவியான ஸ்தீரி அவர் பாதத்தை முத்தம் செய்தாள். இது ஆண்டவரை ஆராதிப்பதைக் குறிக்கும். பாதத்தில் பரிமள தைலம் பூசினாள். இது அவரை மகிமைப்படுத்துவதைக் குறிக்கும். எதைக் குறித்தும் மேன்மை பாராட்டாமல் அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, பணிந்து, அவர் இரக்கத்திற்காக மன்றாடிக் கெஞ்ச வேண்டும். பொருத்தனை பண்ணி ஜெபிக்க வேண்டும். துன்பங்கள் மாறும் முன்பாகவே அந்த பொருத்தனையை நிறைவேற்ற வேண்டும். அப்போது சீக்கிரம் விடுதலை கிடைக்கும்.

அநேகர் துன்பம் வந்தவுடன் மனிதனை நம்புகிறார்கள். அவர்கள் மனிதனை நம்புகிற அளவுக்கு ஆண்டவரை நம்புகிறதில்லை. மனிதனின் உதவி கிடைக்கவும் செய்யலாம், கிடைக்காமலும் இருக்கலாம். மனிதனை நம்புவதை விட அதிகமாக இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவை நம்ப வேண்டும். மனுஷன் இரட்சிக்கத் திராணியில்லாதவன் என சங் 146/3ல் வாசிக்கிறோம். ஏனென்றால் அந்த மனிதனையும் ஆண்டவர் தான் இரட்சிக்க வேண்டும். அவரை முழுவதும் நம்புகிறவர்களுக்கு எட்டாத காரியங்களை, பெரிய காரியங்களைச் செய்வார். ஆபத்துக் காலத்தில் நோக்கிக் கூப்பிடும் போது விடுவிப்பார்.

### 356. காலையில் முதல் மணி நேரத்தில் ஏன் கர்த்தரைத் தேட வேண்டும்?

அதிகாலையில் அவரைத் தேடுகிறவர்கள் தான் அவரைக் கண்டு கொள்ள முடியும். விழித்தவுடன் ஆண்டவரைத் தேடுங்கள். சாத்தான் என்ன விதங்களிலெல்லாம் உன்னைக் கீழே தள்ளலாம், வீழ்த்தலாம் என்றிருப்பான். அதற்கு முன்பாகவே அதிகாலையில் பிரச்சனைகளை மேற்கொள்ளும் கிருபைகளை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். வேலைகளையெல்லாம் முடித்த பிறகு ஆண்டவரைத் தேடலாம் என்றால் வேலைகளையெல்லாம் சாத்தான் குழப்பி விடுவான். 1 மணி நேரத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலையை 4 மணி நேரமாக செய்து முடிக்க வேண்டியது வரும். சாத்தானால் தீமை

வருவதற்கு முன்பதாகவே ஆண்டவரைப் பற்றிக் கொள்வீர்களென்றால் தீமைக்குத் தப்பிக் கொள்ள முடியும். ஜெபித்து தேவனிடம் உதவி கேட்டுச் செய்யும் காரியங்களில் குழப்பம் வராது. நேர்த்தியாய், செம்மையாய் செய்து முடிக்க முடியும். உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்பொழுது உன் காரியங்களை வாய்க்கப் பண்ணுவார். உன் பாதைகளை செவ்வைப் படுத்துவார். (நீதி 3/5)

**357. தேவ பணியை, தேவ சித்தத்தை தொடர்ந்து செய்ய வேண்டுமானால் நாம் எப்படி காணபட வேண்டும்?**

கர்த்தரின் ஊழியத்திற்கு விரோதமாக தேவ சத்துருக்கள் எழும்புவார்கள். சன்பல்லாத், தொபியா, அம்மோனியர், அஸ்தரோத்தியர் எழும்புவார்கள். கர்த்தருடைய பபீட வேலை அதாவது ஆராதனைக்கு விரோதமாக எழும்புவார்கள். ஆண்டவரின் பிள்ளைகளுக்கு இடம் கொடுக்கப்படக் கூடாதபடிக்கு தடை செய்வார்கள். தேவபிள்ளைகள் எந்த காரியத்திலும் முன்னேறாதபடி தடை செய்வார்கள். அதையும் மீறி நாம் கர்த்தருக்கென்று செய்யும் பொழுது சத்துருக்கள் கோபப் படுவார்கள். ஊழியத்தை எப்படி கெடுக்கலாம் என திட்டம் பண்ணுவார்கள், பரியாசம் பண்ணுவார்கள்; அவமதிப்பார்கள்; அற்பமாய் பேசுவார்கள், கர்த்தரின் வேலையைத் தடுக்க கட்டுப்பாடு பண்ணுவார்கள். ஊழிய வேலைகள், ஆலய கட்டுமான வேலைகள், கர்த்தருக்கடுத்த காரியங்கள் இவைகளுக்கு விரோதமாக சாத்தானும், சத்ருக்களும் எப்போதும் எழும்புவார்கள். நாம் இதன் மத்தியிலும் தொடர்ந்து தேவ பணியைச் செய்ய

1. இரவும் பகலும் ஜெபிக்க வேண்டும்.
2. தேவ சத்துருக்களின் கொலை வெறிகளையும், துர்க்கிரியை களையும் கட்டி ஜெபிக்க வேண்டும்.
3. குடும்பம் குடும்பமாக ஒருமித்து கர்த்தரின் காரியமாக எழும்ப வேண்டும்.
4. ஜெபத்தை எந்த சூழ்நிலையிலும் விட்டு விடக் கூடாது.
5. எக்காளம் ஊத வேண்டும் - அதிகமாகத் துதிக்க வேண்டும்
6. சர்வாயுதவர்க்கம் தரிக்க வேண்டும் - சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடகம், இரட்சணிய மென்னும் தலைச்சீரா, வேதவசனமாகிய ஆவியின் பட்டயம், ஆவியினால் விண்ணப்பம் பண்ணுதல்.
7. இரட்சிப்பின் வஸ்திரம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

8. பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டும்.
9. கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும்.
10. உபவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்.

**358. நாம் தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலவித ப்ளள் எவைகள்?**

1. **ஜீவ ப** நம்மைக் கர்த்தருக்கு ஜீவ பயாக ஒப்புக்கொடுக்க வேண்டும். உன்னை ஜீவ பயாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்காமல் 1000 ஸ்தோத்திரபகளைச் செலுத்தி பயனில்லை.
2. **ஸ்தோத்திர ப** ஜீவ பயாக ஒப்புக் கொடுத்தவர்கள் ஸ்தோத்திர பகளைச் செலுத்த வேண்டும்.
3. **ஆராதனை ப** தேவ பிள்ளைகள் தேவனை ஆராதிக்காமல், T.V. யைப் பார்த்தால் அதனால் பிரயோஜனமில்லை. T.V. யில் பிறர் ஆராதிப்பதைப் பார்த்தால் போதாது, நீ தேவனை ஆராதிக்க வேண்டும். தேவ பிள்ளைகள் ஒருமித்து சேர்ந்து தேவனை ஆராதிக்க வேண்டும்.
4. **தான ப** இல்லாதவர்களுக்கு நம்மிடம் கேட்காமல் நாமாகக் கொடுப்பது தானம். தான பகளின் மேல் தேவன் பிரியமாக இருக்கிறார்.
5. **தர்ம ப** இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் நம் பங்குகளை கேட்கும் பொழுது கொடுப்பது தான் தர்மம். இந்த பயின் மேலும் தேவன் பிரியமான இருக்கிறார். நன்மை செய்யவும், தான தர்மம் செய்யவும் மறவாதிருங்கள் (எபிரேயர் 13/ )
6. **நன்மை ப** நாம் செய்கிற எந்த வேலையாக இருந்தாலும், அதனால் பிறருக்கு நன்மை வர வேண்டும். இது தான் நன்மை ப எந்தவொரு நன்மையும் செய்யாமல் சும்மாயிருப்பது கர்த்தருக்குப் பிரியமல்ல. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். உங்கள் வாழ்க்கையிலே ஏதாவது ஒரு நன்மை செய்து கொண்டே இருக்க வேண்டும்.
7. **நீதியின் ப** நீதியின் பகளைச் செலுத்தி கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருங்கள். ஆண்டவருக்கு எது பிரியமோ, அதைச் செய்வது தான் நீதியின் பயாகும்.
8. **விண்ணப்ப ப** சிலர் 5 நிமிடம் தான் விண்ணப்ப ப செலுத்திகிறார்கள். சிலர் 5 மணி நேரம் செலுத்துகிறார்கள். இன்னும் சிலர் இரவும் பகலும் விண்ணப்ப பசெலுத்துகிறார்கள். அதிகமாக

ஜெபிப்பவன் அதிகமாக விண்ணப்ப ப□செலுத்துகிறான். ஆகவே அதிகமாக ஜெபிப்பதற்கென்று உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுங்கள்.

9. **உற்சாக ப□** சங் 51/12ல் உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் என வாசிக்கிறோம். இது உற்சாகமாய் கர்த்தருக்கென்று செய்கிற காரியத்தைக் குறிக்கும். அதை உற்சாகமாய் செய்தால், உற்சாக ப□ாக தேவன் அதை ஏற்றுக் கொள்வார்.

10. **பொருத்தனை ப□** எந்த பொருத்தனை பண்ணினாலும், அதற்கு என்ன கிரயம் செலுத்த வேண்டியதிருந்தாலும் அதை நிறைவேற்ற வேண்டும். தடைகள் வந்தாலும் பொருத்தனைகளை உண்மையாகச் செலுத்த வேண்டும். இது தான் பொருத்தனை ப□

11. **ஆவிக்கேற்ற ப□**- (I பேதுரு 2/9) மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்பவர்கள் தான் ஆவிக்கேற்ற ப□ளை செலுத்துபவர்கள். கருத்தோடு ஆராதிப்பது நம் மூளை அறிவினால் ஆராதிப்பதாகும். இந்த ஆராதனை செலுத்துவது மட்டும் அல்ல. ஆவிக்கேற்ற ஆராதனையும் செலுத்த வேண்டும். இதற்கு பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டும். மனுஷ ஆவியோடு பரிசுத்த ஆவியானவர் இணைகிறார். மனுஷ ஆவிக்கு பரிசுத்த ஆவியானவர் ஆராதிக்க உதவி செய்கிறார். ஆவியினால் ஆராதனை செய்வது ஆவிக்கேற்ற விதமாய் இருக்கும். அது நம் மூளை அறிவுக்கேற்ற விதமாய் இருக்காது. நாம் ஆண்டவருக்கு சொந்த ஜனம். அவர் புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி; ஆவிக்கேற்ற ப□ளைச் செலுத்தும்படி அழைக்கப்பட்ட கூட்டமாக இருக்கிறோம்.

12. **நற்கிரியையாகிய ப□**

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 2/10).

நீதிமான் ஜீவ விருட்சத்துக்கு ஒப்புமையாகக் கூறப் பட்டிருக்கிறான். ஜீவ விருட்சத்தில் 12 விதமான கனிகள் உண்டு. அதைப் போல நாமும் 12 விதமான ப□ளைச் செலுத்த வேண்டும்.

**359. யாக்கோபு பெற்ற விசேஷித்த வாக்குத்தத்தங்கள் எவைகள்?**

1. நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.
2. உன் சந்ததி பூமியின் தூளைப்போல இருக்கும்.

3. உனக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.
4. நான் உன்னோடே கூட இருப்பேன்.
5. நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காப்பேன்.
6. இந்த தேசத்திற்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன்.
7. நான் உன்னைக் கைவிடுவதில்லை.

## ù_TeLs (ùRôPof£)

**33. தேவாலயத்திருந்து கர்த்தரின் சத்தம் கடந்து வந்து யுத்தம் செய்யும்படியாக ஜெபம் :**

அப்பா பிதாவே! 17 பாவ ராஜ்யங்கள் எமக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகின்றன. மகா பாபிலோன், அந்தகாரலோகாதிபதிகள், பயங்கரவாதிகள், தீவரவாதிகள், வானமண்டல பொல்லாத ஆவிகள், மந்திரவாத ஆவிகள் எமக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகின்றன. பரலோக ஆலயத்தில் கிருபாசனத்தில் வீற்றிருப்பவரே! அங்கேயிருந்து உம் வார்த்தையின் வல்லமை, அக்கினி வல்லமை, இருபுறமும் கருக்குள்ள பட்டய வல்லமை, உம் நாசியின் சுவாச வல்லமை, உம் ஓங்கின புயத்தின் வல்லமை, உம் ஆவியின் வல்லமை இறங்குவதாக. மரணக் கட்டில் இருப்பவர்களை உயிர்ப்பித்து விடுவியும். கர்த்தாவே! பாதாளக் கட்டுகள், வேதாளக் கட்டுகள் அழிவதாக. உம் வல்லமையினால் உயிர்ப்பியும். மகா பெரிய சேனையாய் மாற்றும். உம் நாமத்தின் வல்லமை கடந்து செல்வதாக. உம் தூதர்களை அனுப்பும். மகா பயங்கரமான தேவனாய் வெளிப்படும். எமக்கு விடுதலை தாரும். ஆமென்.

**34. கர்த்தர் நம்மை உலகிற்கு வெளிச்சமாய் மாற்ற ஜெபம் :**

அப்பா பிதாவே! வீட்டுக்கு வெளிச்சமாய் என்னை மாற்றும். சபைக்கு வெளிச்சமாய் என்னை மாற்றும். ஊருக்கு, தேசத்துக்கு, உலகத்திற்கு என்னை வெளிச்சமாய் மாற்றும். அநேகரை வெளிச்சத்தண்டை நடத்தும் கருவியாக மாற்றும். உம் கரத்திலுள்ள ராஜமுடியாய் என்னை மாற்றும். ஆமென்.

**35. நித்திய கிருபையுடன் கர்த்தர் நமக்கு இரங்கும்படியாக ஜெபம் :**

நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்ற வாக்குத் தத்தத்திற்காக ஸ்தோத்திரம். உம் நித்திய இரத்தம் என்னைக் கழுவுவதாக. பாவ சாபங்கள், சாத்தான் சாபங்கள், சத்ருக்களின் சாபங்கள், காரணமுள்ள சாபங்கள், காரணமில்லா சாபங்கள், குடும்ப சாபங்கள் யாவும் உம் நித்திய கிருபையால் மாறிப் போவதாக. உம் நித்ய

கிருபையால் நித்ய ஆசீர் உண்டாவதாக. வாக்குமாறா தேவனே! வாழ்வளிக்க வாரும். ஆமென்.

**36. ஆபத்திலே கர்த்தர் நமக்கு உதவி செய்யும்படியாக ஜெபம் :**

கர்த்தாவே! சிறிய ஆபத்தோ, பெரிய ஆபத்தோ, எப்பேர்பட்ட தீமையின் மத்தியிலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிடுவேனாக. உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் இரக்கம் செய்ய வல்லமை உடையவரே! இதோ எங்கள் வாழ்க்கையிலே எத்தனையோ ஆபத்துக்கள் சுற்றிலும் இருக்கிறது. ஆபத்திலே அரும்துணையாய் வாரும். ஆபத்திலே என் ஆண்டவரே! எனக்குத் துணை செய்ய வாரும். சேனைகளின் கர்த்தர் என்னும் நாமம் உடையவரே! பரம சேனையின் திரள் உடையவரே! அக்கினி மயமான குதிரைகள், இரதங்கள் உடையவரே! அக்கினிமயமான தூதர்கள் உடையவரே! இஸ்ரவேலின் இராணுவங்களின் அதிபதியே! இறங்கி வாரும். எங்களுக்கு விரோதமான தீமைகள், பொல்லாத ஆவிகள், மனுஷீக அடிமைத் தனங்கள், பொல்லாதவர்களின் ஆளுகைகள் யாவும் மாறுவதாக. எங்களால் ஒன்றும் கூடாது. உம்மால் எல்லாம் கூடும். சர்வ வல்லவரே! இறங்கி வாரும்; யுத்தத்திலே, ஆபத்திலே எமக்கு உதவி செய்வீராக. சாத்தான் கோட்டைகளை உடைத்திடும் ; சத்ருக்களின் கோட்டைகளை உடைத்திடும். விடுவிக்கிற கர்த்தராய் இறங்கி வாரும். ஆமென்.

**37. பின்மாரிக்காலத்து மழைக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.**

1. ஆதியிலே ஜலத்தின்மேல் அசைவாடின ஆவியானவரே! இந்த கடைசிக் காலத்திலே இந்த உலகத்தின் மேல் அசைவாடும்படியாக, எல்லா ஜனங்களையும் உம்மண்டை இழுக்கும்படியாக, எழுப்புதல் உண்டாகும்படியாக ஜெபிக்கிறோம்.
2. நித்திய ஆவியே (எபி 9/14 )! நித்யமான காரியங்களைச் செய்வீராக.
3. ஆதி அப்போஸ்தலர் காலத்தில் முன்மாரி பொழிந்ததே! விசேஷித்த அற்புதங்கள், மரித்தோர் உயிர்த்தெழுதல், கண்திறத்தல், செவி திறத்தல், குஷ்டரோகி கொஸ்தமாகுதல் போன்ற அதிசயங்கள் நடந்ததே! இந்த கடைசிக் காலத்தில் ஜனங்கள் அற்புத அடையாளங்களைக் கண்டாகிலும் உம்மண்டை திரும்பும்படியாக ஒரு விசை அசைவாடும் ; கிரியைகளை நடப்பியும். பின்மாரிக் கால மழை விழுவதாக. உலக எழுப்புதல் உண்டாவதாக.
4. முந்தின மாரியைவிட பின்மாரியினால் மேலான மேன்மையான காரியங்கள், அற்புதங்கள் நடப்பதாக! முந்தின ஆலயத்தின்

மகிமையைப் பார்க்கிலும் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாய் இருப்பதாக. (ஆகாய் 2/9). முந்தின இரசத்தைக் காட்டிலும் பிந்தின இரசம் அதிக சுவையுள்ளதாய் மாறுவதாக.

5. பின்மாரிக்கால மழையானது பரிசுத்த ஆவியின் அக்கினியோடு கடந்து வருவதாக (அப் 2/3). நித்ய அக்கினியானது வெளிப்படுவதாக (ஏசாயா 33/14).
6. வானங்களே! உயர இருந்து சொரியுங்கள். (ஏசாயா 45/8).
7. ஆகாய மண்டலங்கள் நீதியைப் பொழியக் கடவது (ஏசாயா 45/8).
8. பூமியானது திறவுண்டு இரட்சிப்பின் கனியைக் கொடுப்பதாக. ஜனங்கள் ஆவியின் மழையால் மனந்திரும்பி இரட்சிக்கப் படுவார்களாக (ஏசாயா 45/8).
9. நீதியும் கூட விளைவதாக (ஏசாயா 45/8).
10. கர்த்தரின் ஆவி ஊதப்படுவதாக ; அதனால் மாம்சமாகிய புல் உலர்வதாக. மாம்சத்தின் மேன்மையும் அதின் மகிமையாகிய பூவானது உதிர்வதாக. உம் வசனம் என்றென்றைக்கும் நின்று சத்தியமானது தேவஆவியின் உதவியினால் உலகமெங்கும் விதைக்கப்படுவதாக.
11. உன்னதத்தில் இருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும் (தாழ்வான வனாந்தர நிலை). அப்பொழுது (ஆவி ஊற்றப்படும் போது) வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும். செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும். இவ்வார்த்தையின்படி பின்மாரி கடந்து வந்து எங்களுக்கு நியாயம் உண்டாவதாக. வனாந்தர சூழ்நிலைகள் மாறுவதாக.
(ஏசாயா 32/13-16).
12. பின்மாரிமழையினால்
    1. நியாயம் உண்டாவதாக - ஏசாயா 32/16
    2. தண்டனை உண்டாவதாக - ஏசாயா 32/16
    3. சமாதானம் உண்டாவதாக - ஏசாயா 32/17
    4. அமரிக்கை, சுகம் உண்டாவதாக - ஏசாயா 32/18
    5. சமாதான தாபரம் உண்டாவதாக - ஏசாயா 32/18
    6. நிலையான தாபரம் உண்டாவதாக - ஏசாயா 32/18
    7. தேவ விரோத நகரம் தாழ்வதாக - ஏசாயா 32/19
    8. வசனம் பரவுவதாக - ஏசாயா 32/20
13. இதோ பயிரிடுகிறவன் (ஊழியக்காரன்) பூமியின் நற்பலனை அடைய வேண்டும் என்று (உலக எழுப்புதல் வரவேண்டும் என்று)

முன்மாரியும் பின்மாரியும் (ஆவியின் பின்மாரி மழை) வருமளவும் பொறுமையாய் காத்திருப்பது போல இந்நாள் வரை பொறுத்தோம்; காத்திருந்தோம் ; காத்திருந்து உபவாசித்துக் கதறினோம். பின்மாரி மழை பொழிவதாக.

14. ஜனங்கள் மனக்கண்களைக் குருடாக்கி வைத்திருக்கும் பிசாசின் கிரியைகள் முற்றிலும் அழியும்படியாக பின்மாரிமழை பொழிவதாக. (2கொரி 4/4)

15. பின்மாரி மழையினால் சுவிசேஷ வாசல்கள், பூட்டிய இருப்புத் தாழ்ப்பாள்கள், அடைக்கப்பட்ட இருப்புக் கதவுகள், அடைக்கப்பட்ட வெண்கலக் கதவுகள் யாவும் திறப்பதாக. சுவிசேஷம் எந்தத் தடையும் இன்றி ஆற்றுநீரைப் போல பாய்வதாக. (மாற்கு 16/20; ஏசாயா 45/4)

16. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகின்ற அறிவை அடையவும் சித்தமுள்ளவரே! எல்லா தேச மக்களுக் காகவும் ஜெபிக்கிறோம். எல்லாரும் விக்கிரகத்தை விட்டு உம்மை நோக்கி மனந்திரும்பவும் உம்மை ஆராதிக்கும்படியாக பின்மாரி பொழிவீராக. (1தீ 2/4). உலகமெங்கும் சத்தியத்தை அறிகின்ற அறிவு உண்டாவதாக. ராஜாக்கள், அதிகாரிகள் இரட்சிக்கப்படுவார்களாக.

17. தளர்ந்த கைகள், தள்ளாடுகின்ற முழங்கால்கள் மாறட்டும். ஜெபிக்காமல் இருக்கின்ற விசுவாசிகளை நீரே எழுப்புதலுக்காக ஜெபிக்கத் தட்டி எழுப்பும். ஆத்துமபாரம் கொடுப்பீராக. உலக பாரம், உலக சிநேக பாரம், கடன் பாரம், வியாதி பாரம், பாவ பாரம் எல்லாம் மாறுவதாக. ஆத்துமபாரம் நிறைவாய் கொடுப்பீராக. முதலாவது உமது ராஜ்யத்தையும், நீதியையும் தேடுகின்ற விசுவாசிகளாய், ஊழியர்களாய் எம்மை மாற்றிக் கொடுக்கும்படி ஜெபிக்கின்றோம். (ஏசாயா 35/3; மத் 6/31-33)

18. தேவபிள்ளைகள் தேவசமுகத்திலே கூடி ஜெபிக்கின்ற சூழ்நிலைகளை அடிக்கடி உருவாக்கித் தாரும். கூப்பிடுகிறவர்கள் சத்தத்தால் ஆலயம் புகையால் நிரம்புவதாக. (ஏசாயா 6/4)

19. பந்தி ஆயத்தப்படுத்தும் கிருபை தாரும். தேவ பிள்ளைகள் ஒருமித்து ஐக்கியத்தோடு ஜெபிக்கின்ற ஜெபங்களை ஒழுங்குபடுத்தும் (ஏசாயா 21/5).

20. ஜாமக்காரரை வையுங்கள் என்று சொல்லப்பட்ட வசனப்படி முழு இரவு ஜெபங்களை நடத்த இடம், சூழ்நிலை எல்லாம் ஆண்டவர் ஆயத்தம் பண்ணும். ஜெபஆவியால் ஜனங்களை நிரப்பும்.

21. ‘புசிங்கள்’ என்ற வசனத்தின்படி சத்தியத்தை செம்மையாய் அறிந்த சாட்சியுள்ள ஊழியர்களை தேவன் தாமே உலகமெங்கும் எழுப்பும். வசனத்தை விதைக்கிறவர்களாக ஒவ்வொரு ஊழியர்களையும் மாற்றும்.

22. ‘குடியுங்கள்’ என்ற வசனப்படி அபிஷேகம் பெற்று ஆவியில் நிறைந்து ஜெபிக்கின்ற அநேகரை எழுப்பும்.

23. பிரபுக்களே! எழுந்து பரிசைகளுக்கு எண்ணெய் பூசுங்கள் என்ற வசனப்படி எப்பொழுதும் தேவபோராயுதங்களைத் தரித்த இயேசுவுக்கு நல்ல போர்சேவகர்களை உலகமெங்கும் எழுப்பும். வேதவசனமான ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொண்டவர்களாய் காத்துக் கொள்ளும்.

24. ‘சீயோனில் எக்காளம் ஊதுங்கள்’ என்ற வசனத்தின்படியாக துதிக்கின்ற, பாடுகின்ற, கோடாகோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கும் கூட்டத்தை ஆயத்தம் பண்ணும். ஆமென்

## 38. நித்ய சமாதானம் தாரும் (எசே 37/26)

1. கர்த்தாவே! நித்ய சமாதான உடன்படிக்கை எம்மோடு பண்ணுவீராக. (ஏசாயா 54/10)
2. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், சமாதானம் நீங்காமல் இருப்பதாக. (எசே 37/26)
3. சமாதானம், சுகம் தாரும் - மாற் 5/34
4. சமாதான வழியில் கால்களை நடத்தும் - லூக் 1/79
5. எம் வீட்டுக்கு சமாதானம் வருவதாக - லூக் 10/5
6. சமாதானத்துக்கேற்றவைகளைப் போதியும் - லூக் 19/42
7. பூட்டிய அறைக்குள் கடந்து வந்து சமாதானம் சொல் சிறையிருப்பைத் திருப்பும் - யோ 24/36
8. உம் சமாதானத்தைக் கொடுப்பீராக - யோ 14/27
9. உம் சமாதானத்தை வைத்துப் போவீராக - யோ 14/27
10. சபைகளுக்குச் சமாதானம் தாரும் - அப் 9/31
11. ஆவியின் சிந்தையால் சமாதானம் தாரும் - ரோமர் 8/6
12. சமாதான வழியை அறியச் செய்யும் - ரோமர் 3/17
13. சமாதானத்துக்கடுத்தவைகளை நாட உதவி செய்யும் - ரோமர் 14/19
14. சமாதானத்தின் தேவன் எம்மோடிருப்பாராக - ரோமர் 15/33
15. சமாதான காரணராயிருப்பீராக - எபே 2/14
16. சமாதானத்தை சுவிசேஷமாய் அறிவிக்க உதவும் - எபே 2/17

17. எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் இருதயத்தைக் காப்பதாக - பி 4 / 7
18. பூரண சமாதானம் தாரும் - ஏசாயா 26/3
19. உம் இரத்தத்தினால் சமாதானம் உண்டாவதாக - கொலோ 1/20
20. சமாதானத்தின் ராஜாவே! சாலேமின் ராஜாவே! நிறைவாய் உம் சமாதானம் தாரும் - எபி 7/2
21. ஆவியின் கனியாகிய சமாதானம் தருவீராக - கலா 5/22
22. சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினை அடைந்தவரே! சமாதானம் தாரும் - ஏசாயா 53/5
23. பிள்ளைகளின் சமாதானம் பெரியதாயிருப்பதாக - ஏசாயா 54/13
24. சமாதானத்தை ஒரு நதி போல தாரும் - ஏசாயா 66/12
25. தேசத்திலே சமாதானம் கட்டளையிடும் - லேவி 26/6
26. கூடாரம் சமாதானத்தோடிருப்பதைக் காணச் செய்வீராக - யோபு 5/24
27. என் அலங்கத்துக்குள் சமாதானமும், சுகமும் இருப்பதாக - சங் 122/7

ஆமென்

## 39. நித்ய வார்த்தையாய் வெளிப்படும்

1. ஆதியிலே இருந்த வார்த்தையானவரே! எமக்காய் கிரியை செய்பவராய் வெளிப்படும் - யோபு 1/1
2. ஆதியிலே தேவனாய் இருந்த வார்த்தையானவரே! எம் தேவனாய் வெளிப்படுவீராக - யோபு 1/1
3. மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனே! எமக்காக யாவும் செய்வீராக - I தீ 3/10
4. கிருபையும், சத்தியமும் நிறைந்தவராய் எமக்கு வெளிப்படுவீராக - யோபு 1/14
5. கிருபை மேல் கிருபை தருவீராக - யோபு 1/16
6. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியே! எம் பாவத்தை மன்னித்துத் தீர்ப்பீராக - யோபு 1/29
7. தேவனுடைய குமாரனே! குமாரனாய் எமக்கு வெளிப்படுவீராக - யோபு 1/34
8. ரபீ! போதகரே! எமக்குப் போதியும் - யோபு 1/34
9. இயேசுவாய் வெளிப்பட்டு உம் ஜனமாகிய எங்களின் பாவங்களையெல்லாம் நீக்கி எங்களை இரட்சியும் - மத் 1/21
10. மேசியாவாக, கிறிஸ்துவாக வெளிப்பட்டு எம்மைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகியும். (யோபு 1/41 ; சங் 23/5)

11. எல்லாரிலும் மேன்மையுள்ளவரே! மேன்மையான காரியங்களை செய்வீராக - யோபு 1/27

12. அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியானவரே! உம் இரத்தத்தினால் சாத்தான் மேல் எமக்கு ஜெயம் உண்டாவதாக - வெளி 12/11

13. நசரேயன் என்னப்பட்டவரே! சகல நன்மைகளாலும் நிரப்பும் - யோபு 1/46

14. வானம் திறப்பதாக. தேவதூதர்கள் உம்மிடத்திற்கு ஏறுவார்களாக. தேவதூதர்கள் உம்மிடத்தி ருந்து வருவார்களாக. யெகோவா சாபோத்தாக வெளிப்படும் - யோ 1/51

15. தாவீதின் வேரே! எமக்கு வேராய் இருப்பீராக. நாங்கள் வெட்டப் பட்டாலும் மறுபடியும் துளிர்க்கச் செய்யும் - வெளி 22/16

16. சர்வ வல்லமையுள்ள கர்த்தரே! வல்லமையுள்ள காரியங்களைச் செய்யும் - வெளி 1/8

17. யூதா கோத்திர சிங்கமாய் வெளிப்பட்டு எமக்காக யுத்தம் செய்யும் - வெளி 5/5

18. ஆமென் என்னப்பட்டவரே! வேதத்தின் அத்தனை வாக்குத் தத்தங்கள் எம்மேல் ப ப்பதாக! ஆமென்!! என்பீராக-வெளி 3/14

19. இம்மானுவேலாய் (தேவன் நம்மோடிருக்கிறார்)எம்மோடு விலகாமல் இரும், தங்கும், வாழும் - மத் 1/22

## 40. நித்ய பிதாவாகிய தேவனாய் வெளிப்படும், கர்த்தாவே!

1. அன்பின் ஆண்டவரே! அந்தரங்கத்தில் பார்க்கிற பிதாவே! வெளியரங்கமாக பலன் அளிப்பீராக - மத் 6/14,15

2. இயேசுவே! உம் மூலமாய் அந்தரங்கத்தில் இருக்கிற பிதாவை நோக்கி ஜெபிக்கின்றோம் - மத் 6/6

3. அந்தரங்கத்தில் எனக்குள் உள்ள பிதாவே! இதோ, இயேசுவின் இரத்தமாகிய அறைவீட்டுக்குள் புகுந்து என் சரீரக் கண்களை மூடி ஆவிக்குரிய மனக் கண்களைத் திறந்து இயேசு மூலமாய் உம்மை நோக்கிப் பார்த்து எனக்கு இரக்கம் செய்யும்படி ஜெபிக்கின்றேன். வெளியரங்கமாய் பதிலளிப்பீராக - மத் 6/6

4. எங்களைச் சபிப்பவர்களை ஆசீர்வதிக்கிறோம். எங்களை நிந்திப்பவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்கிறோம். எங்களைத் துன்பப் படுத்துபவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்கிறோம். எம்மை உம் புத்திரராய் ஏற்றுக் கொள்ளும் - மத் 5/45

5. பிதாவே! நீர் பூரணசற்குணராய் இருப்பது போல, எம்மையும் பூரண சற்குணராக்கும். எம்மைப் பரிசுத்தப்படுத்தும் - மத் 5/48

6. நாங்கள் வேண்டிக் கொள்வதற்கு முன்னரே இன்னது தேவை என்பதை அறிந்திருக்கிற பிதாவே! நாங்கள் நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும் அதிகமாக எங்களை நினைத்து எங்கள் காரியங்களை எங்களுக்கு நடத்தித் தாரும் - மத் 6/8

7. அந்தரங்கத்தில் உள்ள பிதாவே! என் உபவாசங்களை எண்ணி வெளியரங்கமாய் பலனளிப்பீராக - மத் 6/1

8. அந்தரங்கத்தில் என் ஜெபத்தை நோக்கி வெளியரங்கமாய் பலனளியும் - மத் 6/5

9. அந்தரங்க தர்மத்தை பார்க்கின்ற நீர் வெளியரங்கமாய் பலனளியும் - மத் 6/3

10. பிதாவே! உம் ராஜ்யத்திற்கேற்ற வல்லமை, கிருபை, அதிகாரம் எம் ஊழியத்திலே, சபையிலே, குடும்பதிலே செயல்படுவதாக - மத் 6/9

11. உம்முடைய சித்தம் பரலோகத்தில் உம் தூதர்கள் செய்கின்றது போல பூலோகிலே நாங்கள் ஒவ்வொரு நாளும் பூரணமாய் செய்ய, செய்து முடிக்க உதவும் - மத் 6/10; 7/21

12. பிதாவே! எங்களுக்கு விரோதமாய் குற்றம் செய்தவர்களை நாங்கள் மனப்பூர்வமாய் மன்னிக்கிறோம். பதிலுக்குப் பதில் செய்யும் எண்ணத்தை விடுகின்றோம். பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தையும் விடுகின்றோம். எங்கள் குற்றங்களையும் பாராமல் எங்களை மன்னியும் ; பாவம் செய்யாது பாதுகாரும். - மத் 6/12, 15

13. பிதாவே! பாவசோதனை, சாத்தான் சோதனை, விசுவாச சோதனை ஒன்றிலும் நாங்கள் தோற்றுப் போகாதபடி உதவி செய்யும் - மத் 6/13

14. பிதாவே! என்றென்றும் உம் ராஜ்யம், வல்லமை, மகிமை எங்களில் கிரியை செய்வதாக - மத் 6/13

15. அந்தந்த நாளில் வேலை, வேலை செய்ய பெலன், உற்சாகம் தாரும் - மத் 6/34

16. என் குற்றங்களைப் பார்க்கின்ற, சோதிக்கின்ற மனம் எனக்குத் தாரும் - மத் 7/5

ஆமென்